ROOVED BY THE TEXT BOOK COMMITTEE

TAMIL

# KAVIMONYTHIRAL

WITH SHORT NOTES

OFFICE OF THE REGISTRAR OF ... 27 JUL 1928 MADRAS

COMPILED BY

ANGAYARKANNI ARUNTHAMIL KALAHAM.

PUBLISHED BY

P. N. CHIDAMBARA MUDALIAR BROS,

PUBLISHERS, & BOOK-SELLERS,

MADURA

1928 [Price As. 5.

TB
031,1x
N23
128929

# கவிமணித்திரள்.

(குறிப்புரையுடன்.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUL 1928
MADRAS

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

1260
494 81186

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
புக்செல்லர்ஸ், பப்ளிஷர்ஸ்
மதுரை.

இரண்டாம் பதிப்பு.

காப்பிரைட்] — [விலை அணு 5.

1928.

178929

மீனலோசனி அச்சியந்திரசாலை, மதுரை:—28.

# உள்ளுறை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 1 |
| நளவெண்பா (சுயம்வரகாண்டம்). | 2 |
| ஷை (கலிதொடர் காண்டம்). | 8 |
| ஷை (கலிநீங்கு காண்டம்). | 11 |
| பரதன் குகனைச் சந்தித்தல். | 15 |
| சோமேசர் முதுமொழி வெண்பா. | 20 |
| கண்ணப்ப நாயனாரின் சிவபக்தி. | 22 |
| வாசுதேவனைப் படைத்துணை யழைத்தல். | 27 |
| பழமொழி. | 30 |
| ஆசாரக்கோவை. | 32 |
| நான்மணிக்கடிகை. | 35 |
| குயிற்பத்து. | ,, |
| குறிப்புரை. | 38 |

உ

# கவிமணித்திரள்.

## கடவுள் வாழ்த்து.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (1)

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. (2)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில. (குறள்) (3)

ஆதி யானை யமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை யுணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. (தேவாரம்)

உயர்வற வுயர்நல முடையவ னவனெவன்
மயர்வற மதிநல மருளின னவனெவன்
அயர்வரு மமரர்கள் அதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே. (திருமொழி)

## கலைமகள் துதி.

தாவரும் உலகெலாம் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். (க-பு-ம்)

## நளவெண்பா.

### சுயம்வர காண்டம்.

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகாஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. (1)

தெரிவன நூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—ஒருபொழுதும்
இல்லா தனவு மிரவே யிகழ்ந்தெவரும்
கல்லா தனவுங் கரவு. (2)

ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டூடா
முருகுடைய மாந்தர் முகநளைக்குந் தண்டார்
அருகுடையான் வெண்குடையா னங்கு. (3)

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளை
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூனாடிச் சோலை புக. (4)

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தால்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. (5)

(சோலையில் அன்னத்தைக்கண்ட நளமகாராஜன் தன் பணிப் பெண்களை ஏவ, அவர்கள் அவ் வன்னத்தைப் பற்றிக்கொணர்ந்து அவன் திருமுன் இட்டனர். அஃவாறிடலும் நளன் அன்னத்தோடு சம்பாஷித்தல்.)

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (6)

(அரசன் இவ்வாறு கூறுதலும் அன்னம் துயர்நீங்கி, தன்னைக் காப்பாற்றியதின் பொருட்டுப் பிரதியுபகாரம் செய்யக் கருதி, அரசனே! விதர்ப்ப நாட்டரசனான வீமன் புத்திரியாகிய தமயந்தியை, உனக்கு மணம் செய்விப்பேன் என்று கூறி, அவள் குணாதிசயங்களைக் கூறத் தொடங்கிற்று.)

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமயந்தி யென்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி யென்றோர் அணங்கு. (7)

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு. (8)

(என்று கூறலும், நளன் அவ் வன்னத்தைத் தமயந்திபால் தூதாக விடுக்க, அதனைக் கண்ட தமயந்தி அன்னத்தின் அருகணைதல்.)

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றாள் ஈங்கு. (9)

(தமயந்தி அன்னத்தைக்கண்டு வினவுதலும் அவ்வன்னம் நளன் சிறப்பை எடுத்துரைத்தல்)

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்—மெய்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (10)

(நளன் சிறப்பைக்கேட்ட தமயந்தி, அவனைக் காணப் பெருமையாற் றுன்புற்றுத் தன்னிலையை அவனுக் குணர்த்து மாறு கூறல்.)

வாவி யுறையும் மடவனமே என்னுடைய
ஆவி யுவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தர்க் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (11)

(தமயந்தி படுந்துயரைத் தோழியர் அரசனுக் குணர்த்த அவன் தன் புத்திரியைக் காண வருதல்.)

கருங்குழலார் செங்கையினல் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரசம் ஆர்ப்ப—நெருங்கு

புரிவளைநின் றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை. (12)

கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேல் தான்வீழ்ந்தாள்—மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தார மெல்லோதிப் பொன். (13)

[தன் புத்திரியின் நிலையைக்கண்ட வீமன் சுயம்வர நாளை யேற்படுத்தச் சிந்தித்தல்.]

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதல்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம். (14)

(அரசன், அனைவர்க்கும் தூது அனுப்புதல்.)

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. (15)

(இச்செய்தியைக்கேட்ட தேவர் முதலியோர் தமயந்தியை மணக்கக் கருதி, வீமன் நகருக்கு வருதல்.)

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. (16)

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைமேற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது. (17)

(நளனைக்கண்ட இந்திரன் அவனையே தூதாக ஏவ அவன் அதற்கு உடன்படல்.)

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனும் நேர்ந்தான் மனத்தினால் மற்றதனை
யின்னதென ஓரா திசைந்து. (18)

(தூதாகச்சென்ற நளன் அவள்பால் தான்கூறிய இன்மொழியையும் அவள்கூறிய வன்மொழியையும் இந்திரனிடம் வந்துகூறல்.)

விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்து
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு. (19)

(ஏவற்றொழிலிற் கிசைந்த நளனுக்குத் தேவர் முதலியோர் வரமளித்தல்.)

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றாய் எனவருண னாகண்ட லன்தருமன்
மற்றோனு மீந்தார் வரம். (20)

(சுயம்வர காலத்து அரசர்கள் வீற்றிருக்கும் மண்டபத்தில் தமயந்தி செல்லல்.)

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்து
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய் போவதே போன்று. (21)

(அரசக் கூட்டத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் நளனுருக் கொண்டிருத்தலைக் கண்ட தமயந்தி மானிடர்க்குரிய கண்ணிமைத்தல் முதலியவற்றால் நளனை ஆராய்ந்தறிதல்.)

கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யந்நாள்
அறிந்தாள் நளன்றன்னை யாங்கு. (22)

(தேவர்கள் வெட்கமுறும்படி நளனுக்கு மாலை சூட்டல்)

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூற—மண்ணரசர்
வன்மாலை தன்மனத்தே சூட வயவேந்தை
பொன்மாலை சூட்டினாள் பொன். (23)

(வெட்கமுற்ற இந்திரன் முதலியோர் தந்நாட்டிற்குச் செல்லுகையில் கலிபுருடனைச் சந்தித்தல்.)

ஈங்குவா வென்னென் றிமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினான்—நீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான். (24)

[இந்திரன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட கலிபுருடன் வஞ்சினங் கூறல்.]

விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவள்தன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றான் கொதித்து. (25)

## கலிதொடர் காண்டம்.

[வஞ்சினம் கூறிய கலிபுருடன் நளனிடத்துப் பன்னிரண்டு ஆண்டுவரையும் குற்றங்காணாமையால் பொறுத்திருந்து பின்பு பற்றல்]

நாரா யணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி. (26)

நன்னெறியிற் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே!
போதுவா யென்னுடனே என்றான் புலிநாகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து. (27)

[நளன் புட்கரனோடு சூதாடி, தன்னுடு நகரம் முதலியவற்றைப் பணயமாக வைத்துத் தோற்றுக் கடைசியில் காட்டிற் கேகல்]

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான் அன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. (28)

(நளன் தன் நாடு நகரங்களைப் புட்காநுக்குக் கொடுத்துக் காட்டிற்குச்செல்வதைக் கண்ணுற்ற நகரமாந்தர் அனைவரும் நளனைக் கண்டு வருந்தல்.)

ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதினி யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. (29)

(நளன், தன் நிலைமையைக்கண்டு வருந்தாநின்ற மாந்தரைத் தேற்றி, தன் குழந்தைகளை வீமன் நகருக்கனுப்பித் தன் மனைவி யுடன் ஏகினன். அப்பொழுது கலிபுருடன் ஏவலால் தோன்றிய பறவையைக் கண்டு தமயந்தி அதனைப் பிடித்துத்தரும்படி வேண்ட, இருவரும் ஒற்றையாடையணிந்து பறவையைப் பற்றல்.)

கொற்றக் கயற்கட் கொடியே இருவேமும்
ஒற்றைத் துகிலால் உடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவே மென்றுரைத்தான்
பற்றகலா வுள்ளம் பரிந்து. (30)

கூந்தல் இளங்குயிலும் கோமானும் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று—வேந்தனே
நன்னாடு தோற்பித்தோன் நானேகாண் என்றதே
பொன்னாடு மானிறத்த புள். (31)

(துகிலைப் பற்றிக்கொண்டு சென்ற பறவையைக்கண்டு தமயந்தி சபித்தல்.)

அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந்தார்—புறங்கடையில்
சென்றார் புகுநரகம் சேர்வாய்கொல் என்றழியா
நின்றாள் விதியை நினைந்து. (32)

(பின்பு இரவில் ஓர் பாழ்மண்டபத்தே இருவரும் ஒருதுகிலை அணிந்து நித்திரை செய்கையில், நளன் தமயந்தியின் துன்பத்தைச் சகியாது 'நாம் இவளை விட்டகன்ருல், இவள் தன் தந்தை யகம் புகுந்து சுகமாக வாழ்வாள்' என்று கருதி, அவ்வஸ்திரத்தைப்பாதி யாக அரிந்து செல்லத்துணிதல்.)

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த வடுபாலில்—தோயல்
கடைவார்தம் கைபோல வாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (33)

தீக்கா னகத்துறையும் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான். (34)

(துயிலினின்றும் விழித்த தமயந்தி, நளனைக்காணுமையால் துன்புற்றுத் தன் தந்தையகம் செல்லுகையில் பாம்பின் வாய் அகப் படல்.)

வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டேன்
ஐயன்மீர் உங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ வென்னு வரற்றினுள் அஞ்சி
இருளீரும் பூணுள் எடுத்து. (35)

(இவள் சப்தத்தைக் கேட்ட வேடன் ஒருவன் வந்து இவளைப் பாம்பின் வாயினின்றும் நீக்கிப் பின் காமுற்றுத் தொடர்கையில் தம யந்தி யவனைச் சபித்தல்.)

தீக்கட் புலிதொடாச் செல்லும் சிறுமான்போல்
யாக்கை தளர அலமந்து—போக்கற்றுச்

சீறு விளித்தாள் சிலைவேடன் அவ்வளவில்
நீறாய் விழுந்தான் நிலத்து. (36)

(அவ்வழிச்செல்லும் வணிகர் கூட்டம், தமயந்தியை அழைத்துக்கொண்டு, அவள் சிற்றன்னை அரசு செலுத்தும் சேதி நாட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தல்.)

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் குடைவணிகன் போயினான்—நீதி
கிடத்துவான் மன்னவர்தம் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து. (37)

கந்தனையும் கன்னியையும் கண்டா யினுஞ்சிறிது
தந்துயரம் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினான் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு. (38)

## கலி நீங்கு காண்டம்.

(நளன் காட்டு மார்க்கமாகச் செல்லுகையில் கார்க்கோடன் என்னும் பாம்பு தீயின் வாய் அகப்பட்டு வருந்தி, நளனைக்கண்டு, தன்னை நெருப்பினின்றும் காக்கும்படி கூறல்.)

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்றான்—நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று. (39)

ஆங்கவன்றான் அவ்வா றுரைப்ப அதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை

மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையால்
எண்ணினன் வைத்தான் எயிறு (40)

(நளனைக் கார்க்கோடன் தீண்டலும் அவனுடைய வடிவம் மாறுதலுற்றது. பின் நளன் அப்பாம்பை நோக்கித் தன் வேற்றுருவம் நீங்கும் உபாயத்தைக்கேட்க, அது பதிலுரைத்தல்.)

சாதி மணித்துகில்நீ சாத்தினல் தண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டும் துறைநாடர் கோவே
யொளிக்குநா ணீங்கு முரு. (41)

வாகு குறைந்தமையால் வாகுகன்என் றன்னும
மாக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தாற்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. (42)

(நளன்,அயோத்தி நகரையடைந்து ருதுபன்னனிடம் தேர்ச்சாரதியாய் அமர்ந்திருக்கையில், விதர்ப்பநாட்டரசனாகிய வீமன், தன் புத்திரி படுந்துயரைக்கண்டாற்றாது, புரோகிதரை விளித்து நளனைக் கண்டுபிடித்து வரும்படி தூதாகவனுப்பினான். புரோகிதர் எங்குந் தேடிக்காணமல், அயோத்தியில் ருதுபன்னனிடம் தேர்ச்சாரதியாய் இருக்கின்ற நளனைக்கண்டு, தமயந்தியிடம் சென்று கூறல்.)

வாக்கினல் மன்னவனை யொப்பான் மறித்தொருகா
லாக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழும்
கூந்தலாய் மற்றுக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்தறான் மார்ப னெடுத்து. (43)

(இதனைக்கேட்ட தமயந்தி நளனை எவ்விதத்திலும் அடைய வேண்டும் என்று கருதி, அதற்கு உபாயமாகத் தான் இரண்டாம் சுயவரம் ஏற்படுத்தித் தூதனுப்பல்.)

எங்கோன் மகளுக் கிரண்டாம் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலாய்
அன்னாளும் நாளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னாளுந் தாராணைச் சேர்ந்து. (44)

இதனைச் செவியேற்ற ருதுபன்னன், தன் சாரதியை யழைத்து தேரைப் பூட்டிக்கொணருமாறு பணிக்க, அவன் விரைவில் ஏகக் கூடிய அசுவங்களைப் பூட்டிக்கொண்டுவாலும் ருதுபன்னன் விதர்ப்ப நாட்டை நோக்கிச் சென்றான். இவ்விருவரும் வந்ததை யறிந்த தமயந்தி, இத்தேர்ச் சாரதியே நளனாயிருத்தல் கூடுமென்று ஐயுற்று, தன் புத்திரர்களையனுப்பி ஆராய்தல்)

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (45)

(தமயந்தி தன் மக்களால் சாரதியே நள மகாராஜனென்றறிந்து தன் தகப்பனுக்கறிவித்தல்.)

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவர்க்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்று
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து. (46)

(வீமன் தமயந்தி கூறியவற்றை ஆராயும் பொருட்டு அவளுடன் சென்று சாரதியை நோக்கி உண்மையான வடிவைக் காட்டு எனலும் அவன் தன்னுருவைக் காட்டல்)

அரவாசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான்—ஒருதுகிலைப்

போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்கும்
கோத்தாயம் முன்னிழந்த கோ. (47)

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்பாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கார்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. (48)

(நளனைவிட்டுக் கலிபுருடன் நீங்கும் காலத்துத் தன்னிடம் வேண்டும் வரத்தைக் கேட்கும்படி சொல்ல நளன் வரங்கேட்டல்.)

உன்சரிதஞ் செல்ல உலகாளுங் காலத்து
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையேல் என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. (49)

என்காலத் துன்சரிதம் கேட்டாரை யானடையேன்
மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி. (50)

(பின்னர் நளன், தன் மனைவிமக்களுடன் தன் நகரடைந்து புட்கரனோடு மறுபடியுஞ் சூதாடித் தானிழந்த பொருள்களனைத்தையும் பெறுதல்.)

அந்த வளநாடும் அவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோன்
நாவேய்ந்த சொல்லால் நளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாம் கொடுத்து. (51)

ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்

பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். (52)

---

## இராமாயணம்.

### பரதன் குகனைச் சந்தித்தல்.

கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்

கற்காணுந் திண்மையான் கரைகாணுக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான். (2)

தன்முன்னே யவன்றன்மை தன்றுணைவன் மொழிந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துருசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பன் யானேசென் றெனவெழுந்தான்

என்றெழுந்த தம்பியொடு மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான்.()

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். (5)

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்

உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான். (7)

வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.(8)

தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்றான்.()

கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிரா னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்ப்பி லுள்ளத்தன் புகல லுற்றான்.(10)

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி லம்மா. (11)

என்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண் மாபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

எனவிவை யன்ன மாற்றம் இயைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப் புளினர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தா னாவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றோ விராமன்மே னிமிர்ந்த காதல்

அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே காட்டுவ லெழுக வென்றான். (14)

காவெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

இயன்றதென்பொருட்டினாலிவ் விடனருக்கென்றபோழ்தும்
அயின்றனை கிழங்குங் காயு மமிர்தென வரிய புல்லிற்
றுயின்றனை யெனவு மாவி துறந்திலன் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வன் யானே.

தூண்டா நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லு வானந்
நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென வினிது கேட்டா னெயினர்கோ னிதனைச்
சொன்னான்.

அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்.

என்பதைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ யழகிதென் னடிமை என்றான்.

அவ்விடை யண்ண றானு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தாநின் றார்க்குஞ் செறிகழற் புளினர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால் விடுத்த தென்றான்.

வேறு.

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ரரென்று குகன்வினவ
வேந்தர் வைகு
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை
முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த
பெரியா ளென்றான். (21)

என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை
யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக்
கழற்கான் மைந்தன்

இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கு
மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற
குரிசி லென்றான். (22)

கைவீர வீர்மைந்தி ரினித்துயரா ளுடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றுமன்றே
விலங்கற் றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன் றன்னோடுங்
கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தே நெடுங்கால
மளித்தி ரென்றாள். (23)

அறந்தானே யென்கின்ற வயனின்று டனைநோக்கி
யைய வன்பி
னிறந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத் தன்மெய்யை
நிற்ப தாக்கி
இறந்தான்ற னிளந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா
மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான் றனைப்பயந்த
பெரியா ளென்றான். (24)

சுடுமையா னத்திடைதன் றுணையேகத் தோன்றல்துயர்க்
கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார் கலியேகக்
கழற்கான் மாயன்

நெடுமையா லன்றளந்த வுலகெல்லாம் தன்மனத்தே
நினைந்து செய்யும்
கொடுமையா லளந்தாளை யாரிவரென் றுரையென்னக்
குரிசில் கூறும். (25)

படரெலாம்படைத்தாளைப் பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்
பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்கால் கிடந்தேற்கு முயிர்ப்பாரங்
குறைந்து தேய
உடரெலா முயிரிலா வெனத்தோன்று முலகத்தே
யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையே விந்நின்றா
ளென்னை யீன்றாள். (26)

வேறு.

என்னக் கேட்டவ் வீரக்கமி லாளையும்
தன்னற் கையின் வணங்கினன் றாயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே. (27)

---

## சோமேசர் முதுமொழி வெண்பா.

தோன்று வகைகாந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். (1)

பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னாளே யௌவைமுன்பு சோமேசா—மன்னத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். (2)

தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்காவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (3)

வேந்துமகற் றோர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா—வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (4)

மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. (5)

ஆர்வீ டனனோ டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்விழந்தான் சோமேசா—நேரே
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (6)

செவ்வேளைப் பாலனென வெள்ளித் திறலழிந்தான்
றுவ்வாத வெஞ்சூரன் சோமேசா—வவ்வா
றுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. (7)

அப்பூதி யார்மறைத்தும் வாகீச ரக்காவைத்
துப்பா னறிந்தனரே சோமேசா—இப்புவியில்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (8)

நீநகைப்ப முப்புரமு நீறுகி மாய்ந்ததே
தூநகையாள் பாலமருஞ் சோமேசா—வானின்
ஒலித்தக்கா லென்னு மூவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். (9)

நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெங்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா—புல்லிய
நோய்நாடி நோய்முத னுடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (10)

---

## சீகாளத்திப் புராணம்.

## கண்ணப்ப நாயனரின் சிவபக்தி.

காண்டலுங் கடவு ளார்தங் கருணைநோக் கினிது பெற்று
மாண்டரும் இரதந் தோய்ந்த வல்லிரும் புருவ மாறி
ஈண்டொளி கெழுபொன் னுவ தென்னமுற் குணங்கள் மாறி
ஆண்டகை இறைவன் தன்பால் அன்பொரு வடிவ மானுன்.

நாள்பல பிரிந்தி ருந்து நண்ணிய சிறுச தங்கைத்
தாளிள மகனைக் கண்ட தாயெனத் தாழா தோடி
நீளெழு வனைய தோள்கள் ஞெமுங்குறத் தழுவி மோந்து
வாளழல் அரக்கி னன்ன மனத்தினுன் முத்தங் கொண்டான்.

செய்யகண் ணீர ரும்பச் செறிமயிர் பொடிப்ப வாதன்
கையகப் பட்ட தெய்வக் கதிர்விடு மணியி னுயேற்கு
ஐயன்வந் தகப்பட் டானென்று அணியெயிறு இலங்க நக்கு
மெய்யெலாம் மெய்யன் பாய விடலைமற் றின்ன சொல்வான்.

யானையும் புலியும் எண்கும் யாளியும் முளவும் கூர்ங்கோட்டு
ஏனமுந் திரியுங் காட்டுள் எந்தைநீ துணையு மின்றிக்

கூனல்விற் றடக்கை வேடர் குலமென இருப்ப தென்னே
ஊனுணா வுனக்கி யாவர் உண்கெனத் தருவார் ஆந்தோ.

தேனொடு தினையின் பிண்டித் தீம்பழம் காய்கி ழங்கு
மானொடு முயல்எய் கேழல் வல்லுடும் பழுங்கு இவற்றின்
ஊனுணா வென்றிவ் வெல்லாம் உதவுவல் யானே நல்ல
கானவர் துணையுண்டு எம்மூர்க் காண்டிவா என்று நின்றான்.

சாமிநீ தனியே யீண்டுத் தங்குதல் தரித்த லாற்றேன்
ஏமநல் லுடுப்பூர்க் கின்னே என்னொடு வருதல் வேண்டும்
நீமன மிரங்காய் எந்தாய் எனப்பல நிகழ்த்தி னான்அக்
கார்மழை யனையான் அற்புக் கடலினுக் கெல்லை யுண்டோ.

மறுமொழி இறைவ னொன்றும் வழங்கல னிருப்ப மீளி
இறைதிரு வுளத்தி னெண்ணம் இவ்வயி னிருத்தல் போலும்
சிறியனேன் இனியித் தெய்வ சிகாமணி தன்னை நீங்கில்
உறுவனோ உயிரி னோடுஎன்று உரைத்தனன் நின்றான் ஆங்கே.

அண்ணல்தன் முடியிற் றூய்நீர் ஆட்டுபு முருகு விம்மத்
தண்ணுறு மலர்மா லூரத் தளிர்சூட்டி யிருத்தல் காணூஉப்
பண்ணவன் றனக்கீ தேற்ற பணியெனத் தேறி யுள்ளம்
மண்ணெழு வனைய தோளான் மற்றது கடைப்பி டித்தான்.

பின்புவேட் டுவர்தங் கோமான் பெரும்பக லாயிற் றன்றோ
என்பெருந் துணையாய் நின்ற இறைவனார் மிகப்ப சித்தார்
இன்சுவை யூன்கொ ணர்ந்திங்கு இடல்வேண்டும் என்ன நீங்கில்
கொன்சின விலங்கின் ஈட்டம் குறுகியென் செயுமோ கெட்டேன்.

என்றுசா லவும் இரங்கி எரிபசி மிகாத முன்னம்
சென்றொரு கணத்துட் கொண்டு திரும்புவ மெனத் துணிந்து

குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணி விளக்கே யெந்தாய்
உன்தழற் பசித ணிப்பன் உறுசுவை யிறைச்சி கொண்டே.

உழுந்துருள் பொழுதின் மீள்வேன் ஒருகண மேனுந் தாழேன்
வழங்குறு கொடுவி லங்கு வருமென அஞ்சேல் ஐய
எழுந்துமேல் வந்த தாயின் என்னைஒய் எனக்கூ வென்று
குழைந்தவிற் றடக்கை கூப்பிக் குறவர்கோன் அரிதின்நீங்கி.

கடிக்கடி மனையுள் நின்ற கன்றகல் புனிற்றுப் போல
அடிக்கடி திரும்பி நின்றே ஐயர்தந் தனிமைக் கேங்க
வடிக்கடி யம்பு பட்டு மழைமுகில் எனக்கி டக்கும்
கிடிக்கடி வேட்டைக் கானங் கிளர்கடுங் காலிற் சென்றான்.

(காட்டிற்சென்ற கண்ணப்பர் தாம் வேட்டையாடிக்கொன்ற இறைச்சிகளை அனலில் பதமுறக்காய்ச்சிக் கல்லையிலிட்டு வாயில் திரு மஞ்சன நீரும் குடுமியில் புஷ்பங்களும் வைத்துக்கொண்டு, கன்றைத் தேடிச்செல்லும் கறவையென விரைந்து சென்று தம் செருப்புக் காலால் சிவபெருமான் நிர்மாலியத்தை நீக்கினர். பின்பு வாய் நீரால் அபிஷேகம் செய்து குடுமியிலுள்ள பூக்களால் அர்ச்சித்து தாம் கொணர்ந்த இறைச்சியை யூட்டித் தாண்டவமாடினர். பின்பு இரவு முழுதும் கடவுளைக் காத்துநின்றார். இவ்விதமாக இரவும் பகலும் ஊணுறக்கமின்றிக் கடவுள் வழிபாட்டிலேயே ஐந்து நாட்கள் சென்றன. ஆறும் நாள் கிரமப்படி கடவுளை அர்ச்சிக்க கண்ணப்பர் செல்லும்பொழுது சில துர்நிமித்தங்கள் ஏற்பட்டன. கண்ணப்பர் உடனே விரைந்து சென்று பிரானைக்கண்டார். அவ்வமயம் சிவபெருமான் நாயனர் மெய்யன்பை உலகத்தார்க்கும் சிவகோசரியாருக்கும் மெய்ப்பிக்க எண்ணி, தமது வலக்கண்ணில் இரத்தம் வழிய நின்றார். நாயனர் அதனைக்கண்டார்.)

காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதற அம்பும்
கோண்டரு சிலையும் வீழக் குஞ்சிப்பூ இறைய ஆட்டும்

நாண்டொடர் அற்ற காலை நாடகப் பாவை போலத்
தூண்டரு தடந்தோட் காளை துண்ணென நிலத்து வீழ்ந்தான்.

நெடும்பொழு துள்ளு யிர்ப்பு நின்றுயிர் உலந்தார் என்னக்
கிடந்துபின் கையா றெய்தக் கெடுநினை வடைந்தெ ழுந்தே
ஒடுங்கலில் துயரால் நெஞ்சம் உண்ணப்பட் டுருமே றுண்ட
மடங்கலே றென்ன நம்பி வாய்விட்டான் கண்ணீர் வார.

முழுவலித் தடக்கை யால்தன் முகமெலாம் குருதி பொங்கி
ஒழுகிய அடித்துக் கொண்டான் உறுகண்ணீர் வெள்ளம் போர்த்த
எழில்கனி மார்பு வீங்க எற்றினான் தலைபி ளக்கக்
கழிதுயர்க் கடலின் ஆழ்ந்தான் கல்லொடு மோதி னானால்.

எவ்வயில் எந்தை யார்க்கிங் கிதுவந்த தெனக்கொன் னாராம்
வெவ்வலி யழல்சீற் றத்து வேட்டுவ ரானோ அன்றி
இவ்வணை விலங்கி னானோ யாதென அறிகில் தேற்றேன்
அவ்வுறு தெவ்வைக் காணில் ஆவிகூட் டுண்கி லேனோ?

மலையிடை எனக்கு வாய்த்த மரகத மணியே! செம்பொன்
இலகொளிக் குன்றே! எந்தாய்! எம்பிரான்! நின்கண் புண்ணீர்
கலுழ்தாற் கென்னை கொல்லோ காரணம்? திருவாய் சற்றும்
அலர்கிலை என்கொல்? என்றான் ஆவிசோர்ந் தருகு சென்றான்

கையினால் துடைத்தான் பல்கால் காலுதல் தவிரா தாக
ஐயனைத் தழுவிக் கொண்டான் அலறினான் நெடும்போ தெல்லாம்
பையென விடுத்துப் பின்பு பச்சிலை மருந்து தந்து
பெய்யில்நோய் தீரும் என்று பெயர்ந்தனன் மருந்து கொய்ய

கானெலாம் புகுந்து சென்று கண்டன எல்லாம் கொய்து
கூனுலாம் சிலைக்கை வேடர் கோமகன் துணைவில் போந்து

வேனிலாற் காய்ந்த தேவின் விழியிடைப் பெய்தான் சோரி
தானிலா வண்ணம் கண்டான் தலையன்பன் ஆவி சோர்ந்தான்.

யானினி இதற்கென் செய்வேன் எனஎண்ணி நிற்ப ஊனுக்கு
ஊனிடல் வேண்டும் என்னும் உரைகண்டு தன்கண் வாங்கி
வானவன் தடங்கண் இட்டால் மாறுமென் றுளம்வ லித்துக்
கானவர் பெருமான் தன்கண் கணையினால் இடந்திட்டானால்.

இடந்ததன் கண்ணை அண்ணல் இறைகண்ணில் அப்பச்சோரி
மடந்தையோர் பாகன் ஆங்கே மாற்றினான் அதனைக் கண்டான்
அடங்கரு மகிழ்ச்சி என்னும் ஆழ்கடல் அதனுள் தாழ்ந்து
மூடங்குளே மடங்கல் அன்னான் முழவுத்தோள் கொட்டி யார்த்தான்.

இன்னணம் உவகை வெள்ளத் திடையவன் உலாவும் வேலை
முன்னவன் பின்னும் அன்னான் முதிர்ந்தபேர் அன்புகாட்டச்
செந்நிறக் குருதி மற்றைத் திருவிழி யினுஞ்சோர் வித்தான்
அன்னது மைந்தன் ஆர்வ ஆர்கலி குடித்த தன்றே

எரிநிர யத்துள் நின்றும் ஏறுபு துறக்கம் புக்கான்
ஒருவன்மற் றதனுள் பின்னும் வீழ்ந்தென உவகை மாறிக்
கரையிலாத் துன்ப வெள்ளக் கடலினுள் அழுந்தி ஏங்கி
வரைபுரை தோழான் பின்னும் மருந்துடை மையில் தெளிந்தான்.

இன்னமோர் கண்ணெனக்குண் டாதலின் இதற்கஞ்சே னென்று
அன்னது களைந்த காலை ஐயர்கண் அறிதற் காகத்
தன்னொரு செருப்புக் காலைத் தம்பிரான் கண்ணி லூன்றிப்
பின்அடு கணைகண் வைத்தான் பிரானது பொறுக்க லாற்றான்.

மறைமொழி பிறந்த தம்வாய் மலர்திறந் தருட்பே ராழி
இறைவர் கண்ணப்ப! நிற்க என:மூக்கால் மொழிந்து கொண்டே

கறையணற் கங்க ணத்த கையினாற் பிடித்தார் செங்கை
உறுகறைப் பொலம்பூ மாரி உம்பர்மண் புதையப் பெய்தார்.

---

## மகாபாரதம்

## வாசுதேவனைப் படைத்துணை யழைத்தல்.

ஆராவணை துறந்து போந்தன் றசோதைகண் களிப்ப நீடு
தராதலம் விளங்க வெண்ணெய்த் தாழிசூழ் தரங்கின் றாடிக்
குராமணங் கமழுங் கூந்தற் கோவியர் குரவை கொண்ட
புராதனன் றனையே யேத்தும் புனிதர்தாள் போற்றி செய்வாம்.

புரோகிதன் தூது வந்து போனபின் புயங்க கேது
விரோசனன் சுதனைக் கங்கா சுதனொடும் வெகுளி மாற்றித்
துரோணனை முதலா மிக்க தொன்மதி யமைச்ச ரோடுஞ்
சரோருக சதன மென்னத் தனித்திருந் தெண்ணி னானே.

தேயமெங் கெங்குஞ் செங்கோல் செலுத்துமத் திகிரிவேந்தர்
ஆயவர் தம்மைக் கூட்ட வடைவினிற் றூது போக்கிக்
காயமு முயிரு மாகிப் பொருள்தொறுங் கலந்து நின்ற
மாயவன் தன்னைக் கூட்ட வளர்மதிற் றுவரை சேர்ந்தான்.

மாடநீள் வீதி மூதூர் வயங்குமா மதிலின் றோற்றம்
ஏடவிழ் துளப மாலங் கிருந்தன னென்று கேட்டுச்
சேடன்வந் தனந்த கோடி செங்கதிர் மணியின் பத்திச்
சூடிகா மகுடத் தோடுஞ் சூழ்ந்ததோர் தோற்றம் போலும்

கார்க்கடல் வண்ணன் றன்பாற் கண்டுயி லொழிந்துபோந்து
மேற்கடற் றுவரை மூதூர் மேவரும் விரகு நோக்கிப்
போர்க்கடற் பொறிகள் யாவும் பொறித்தவப் புரிசை தன்னைப்
பாற்கடல் வளைத்த தொக்கும் பன்மல ரகழி யம்மா.

ஈண்டுநீ வரினு மெங்க ளெழிலுடை யெழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக மாட்டான்
மீண்டுபோ கென்றன் றந்த வியன்மதிற் குடுமி தோறுங்
காண்டகு பதாகை யாடை கைகளாற் றடுப்ப போன்ற.

அருள்குடி யிருக்குங் கண்ண னவதரித் தனனென் றெண்ணித்
தரணியின் மீது வந்து தன்னுடைச் சோதி வைகும்
பரமமா ஞான போகப் பதிகுடி யிருந்த தன்ன
திருநகர் வீதி புக்கான் சித்தசித் துணர்வி லாதான்.

வந்தமை யறிந்து கொற்ற வாயிலோர் தம்மை நோக்கி
யந்தன்மா மதலை வந்தா லறிவியா தலைமின் என்று
சந்திர னொடுங்கி நிற்பத் தபனனே சரிக்குமாறு
பந்தனை யிலாதான் யோகத் துயில்வரப் பள்ளி கொண்டான்.

பொற்புடைப் புனிதன் கோயிற் புறத்தினி லனிக நிற்பச்
சற்பவெம்பதாகைவேந்தன் றனையறத்தனிச்சென்றெய்தி
யுற்பல வண்ணன் பள்ளி யுணர்தரு காறு மிட்ட
சிற்பவண் டவிசி னேறித் திருமுடிப் பக்கஞ் சேர்ந்தான்.

வந்திலன் விசய னென்று வான்றுயில் புரிந்த வண்ணல்
சிந்தனை செய்யும் வேலைச் சிந்தையிற் கடிய தேரோன்
பந்தனை யறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப
முந்துற விழித்து நோக்கி முகமலர்ந் தருள்செய் தானே.

நின்றவ ணிருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த நேமிப்
பொன்றிகழ் படையோ னந்தப் பொய்த்துயிற் பாய னீங்கி
மன்றலந் தொடையன் மார்பன் வரவெமக் குரைசெ யாதென்
னென்றுரா நெருங்கப் புல்லி யின்சொலா லுவகை செய்தான்.

இருவிரும் வந்த வாறென் னியம்புதி ரென்று வாச
மருவிரி துளப மாலை மரகத வண்ணன் கேட்பச்
செருவினி லெமக்கு வெம்போர் செய்துணை யாக வேண்டும்
பொருவிலோ யென்று கொண்டவ் விருவரும் புகன்ற காலை.

உற்றம ருதவி செய்வா னுதிட்டிரன் றனக்கு முன்னே
சொற்றன மாங்க ணிங்குந் துயிலுணர் பொழுதத் தின்று
விற்றிறல் விசயன் மூந்த விழிக்கிலக் கானு னென்று
பற்றறத் துணிந்து சொன்னான் பாண்டவர் சகாய னானன்.

முடைமகழ் முல்லை மாலை முடியவன் றன்னைப் போரிற்
படையெடா தொழிமி னென்று பன்னக துவசன் வேண்ட
நெடியமா முகிலு நேர்ந்து நினக்கினி விசய போரில்
அடுபடை யின்றிச் செய்யு மாண்மையென் னறைதி யென்றான்.

செருமலி யாழி யங்கைச் செழுஞ்சுடர் நின்றென் றேரிற்
பொருபரி தூண்டி னிந்தப் பூதலத் தரச ரொன்றோ
வெருவரு மியக்கர் விண்ணோர் விஞ்சைய ரெனினு மென்கை
வரிசிலை குழைய வாங்கி மணித்தலை துமிப்ப னென்றான்.

அடர்சிலை விசய னிவ்வா றிசைத்தலு மமலன் வஞ்சப்
படவர வுயர்த்த வென்றிப் பார்த்திபன் றன்னை நோக்கி
நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற் கூர்வ தன்றி
மிடைபடை யேவி நம்மோ டமர்செயேன் வேந்த வென்றான்.

எம்மையே யொழிய வுள்ள யாதவ குலத்து ளோர்கள்
தம்மையு மெம்மு னான தாலகே துவையுஞ் சேரச்
செம்மையோ டுதவி யாகக் கொண்டுநீ செல்க வென்று
மும்மையு முணர்ந்த நாதன் முன்னுறப் பின்னுஞ் சொன்னான்.

கிருதவன் மாவக் குரோணிக் கிளர்படை யோடு நின்பால்
வருவனென் றுரைத்து வேண்டு மதுராவாய் மைகளுங் கூறி
மருதுபோழ்ந் திட்ட செங்கண் மாயவன் விடுப்ப வேகிக்
கருதலான் வினய மொன்றுங் கண்ணன்முன் னேனைக் கண்டான்.

கண்ணனங் கருளிச் செய்த கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன மாற்றமு மரசன் சாற்றி
யெண்ணருந் தொகைகொள் சேனை யாதவ குமர ரோடே
யண்ணலே வருகென் றோதி அத்தினு புரிபுக் கானே.

கூறிய வேக நாகக் கொடியவ னகன்ற பின்னர்த்
தேறிய விசய னேடுஞ் செழும்புனற் றுவரை நீங்கி
யாறிரு நாமத் தோனு மையிரு நாமத்தோனு
மூறிய கருணை நெஞ்சி னுகிட்டிர னிருக்கை புக்கார்.

---

## பழமொழி.

### அறிவினர் மாண்பு.

ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாயிருள் நீக்கும் மதியம்போல் பன்மீனும்
காய்கலா வாகு நிலா. (1)

### மதிப்பு மிக்கவரை அழிக்க முயலுதல்.

மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்காகும்
நற்கெளி தாகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில். (2)

### கல்வி யில்லா விடத்தும் மாட்சிமை மிகுதல்.

கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாண மிகநல்லார்
பொற்ப உரைப்பான் புகவேண்டா கொற்சேரித்
துன்னூசி விற்பவ ரில். (3)

### நீசரில் நல்லார் இல்லாமை.

நிரந்து வழிவந்த நீசரு ளெல்லாம்
பரந்தொருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்
மரம்பயில் சோலை மலைநாட என்னும்
குரங்கினுள் நன்முகத்த வில். (4)

### பெரியோர் சிறப்புக்குச் சிறியோர் அருகராகாமை.

பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றே
நாய்மேல் தவிசிடு மாறு. (5)

### தன் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தல்.

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். (6)

### கெட்டார்க்கு நட்டார் இல்லாமை.

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். (7)

சிறியார் அறிந்த மறைவெளிப்படும்.

பெருமலை நாட! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க் குரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று (8)

அண்மையிற் கொள்ளும் நன்மையை நாடல்.

எனைப் பலவே யாயினும் சேய்த்தாப் பெறலின்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே
இனக்கலை தேன்கிழிக்கு மெற்கல்சூழ் வெற்ப!
பனைப்பதித் துண்ணார் பழம். (9)

இன்சொல் இடர்ப்படுக்காமை.

புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியாய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில். (10)

---

## ஆசாரக்கோவை.

ஆசாரம் தவறாதவர்கள் அடையும் நன்மைகள்.

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். (1)

ஆடை உடுத்தல்.

உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்

ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை. (2)

## வைகறை யெழுந்து சிந்திப்பதும் செய்வதும்.

வைகறை யாமம் துயிலெழுந்து, தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையுந் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. (3)

## ஐங்குரவரும் அவரைத் தொழுதலும்.

அரசனு பாத்தியாயன் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவரும் கண்ட நெறி. (4)

வேறு.

இருகையால் தண்ணீர் பருகார், ஒருகையால்
கொள்ளார், கொடாஅர், குரவர்க் கிருகை
சொறியார் உடம்பு மடுத்து. (5)

சுடரிடைப் போகார்; சுவர்மேல் உமியார்;
இடரெனினும் மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்;
படைவரினும் ஆடை வளியுரைப்பப் போகார்;
பலரிடை ஆடை உதிராரே; என்றும்
கடனறி காட்சி யவர். (6)

முன்துவ்வார் முன்னெழார் மிக்குரார்; ஊணின்கண்
என்பெறினும் ஆற்ற வலமிரார்; தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால். (7)

காவின் நீர் நீங்காமை உண்டிடுக; பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
போறி வாளர் துணிவு. (8)

கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்
உடல்கொடுத்துச் சேர்தல் வழி. (9)

கைப்பன வெல்லாம் கடை, தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண். (10)

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். (11)

அந்திப் பொழுது கிடவார், நடவாரே,
உண்ணார், வெகுளார், விளக்கிகழார்; முன்னந்தி
அல்குண் டடங்கல் வழி. (12)

முறுவல், இனிதுரை, கானீர், மணை, பாய்,
கிடக்கையோ டிவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யுஞ் சிறப்பு. (13)

உடைநடை சொற்சோர்வு வைதல்இந் நான்கும்
நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் தத்தம்
குடிமைக்கும் தக்க செயல். (14)

தமக்கென் றுலையேற்றார்; தம்பொருட்டுண் கொள்ளார்;
அடுக்களை எச்சிற் படாஅர்; மனைப்பலி
ஊட்டினமை கண்டுண்க ஊண். (15)

## நான்மணிக்கடிகை.

நாற்றம் உரைக்கும் மலருண்மை; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம்;—தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கும்; முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில். (1)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்;
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்; கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள். (2)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவமிலார் இல்வழி இல்லை; தவமும்
அரசியல் இல்வழி இல்லை; அரசனும்
இல்வாழ்வான் இல்வழி யில். (3)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றந்
தமரல்லார் கையகத் தூண். (4)

எரி சிறிதாயின் நீருரும்; இல்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூறும்; மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூறும்; ஊறும்
ஊன்சிறி தாயிற் பகை. (5)

---

## திருவாசகம்.

### குயிற்பத்து.

கீதம் இனிய குயிலே! கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவிற் பாதலம் ஏழினுக் கப்பால்

சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந் துநின்ற தொன்மை
ஆதி குணம்ஒன் றும்இலான் அந்தம் இலான்வரக் கூவாய்!

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே! தென்பாண்டி நாடனைக் கூவாய்! (2)

நீல உருவிற் குயிலே! நீண்மணி மாட நிலாவும்
கோல அழகிற் றிகழுங் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோ சமங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய்! (3)

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லே!இது கேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்டவள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக்கூவாய்!

சுந்தரத் தின்பக் குயிலே! சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவர் ஆசை அறுப்பான்
முந்து நடுவு முடிவும் ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய்! (5)

இன்பந் தருவன் குயிலே! ஏழுலகும் முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே! கோகழி நாதனைக் கூவாய்!

உன்னை உகப்பன் குயிலே! உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப் புகழிற் றிகழும் அழகன்

மன்னன் பரிமிசை வந்த வள்ளல், பெருந்துறை மேய
தென்னவன்,சேரலன், சோழன், சீர்ப்புயங் கன்வரக் கூவாய்!

வா இங்கே நீகுயிற் பிள்ளாய்! மாலொடு நான்முகன் தேடி
ஓவி யவர்உன்னி நிற்ப ஒண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவிவ ரும்பரிப் பாகன் றாழ்சடை யோன்வரக் கூவாய்!(8)

காருடைப்பொன்றிகழ் மேனிக் கடிபொழில் வாழுங்குயிலே
சீருடைச் செங்கம லத்திற் றிகழுரு வாகிய செல்வன்
பாருடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை ஆண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய்!(9)

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லே!இது கேணீ
அந்தணன் ஆகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமர் ஆம்அவன் என்றிங்கென்னையும் ஆட்கொண் டருளும்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்!

# குறிப்புரை.

## கடவுள் வாழ்த்து.

(எண் பாட்டைக்குறிக்கும்.)

கடவுள் வாழ்த்து-அறிதற்கரிய கடவுளை மனமொழி மெய்களால் வாழ்த்துதல். கடவுள்-கட, பகுதி. உள், தொழிற் பெயர் விகுதி. இது மனமொழி மெய்களால் அறியமுடியாத பரம்பொருளை யுணர்த்தும் தொழிற்பெயர்.

திருக்குறள் - இதனையியற்றியவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாராவர். இவர் சென்னைநகருக் கடுத்த மைலாப்பூரில், ஆதியென்பவள் செய்த தவப்பேற்றால் புத்திரராகத்தோன்றிக் கல்வியில் தேர்ச்சியடைந்தனர். பின்பு உலகத்தார் உய்யும்பொருட்டு இந்நூலைச் செய்தருளினார். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளை யுடையது. இந்நூலின் சிறப்பு நோக்கிச் சகல பாஷைகளிலு மிதனை மொழிபெயர்த்திருக்கின்றனர். இந்நூலாசிரியர் கடைச்சங்கப்புலவர் காலத்தினர்.

1. ஆதிபகவன்-ஆதியாகிய பகவன். (முதன்மையான கடவுள்) முதற்று-முதன்மையாகவுடையது. முதல, முதல் பகுதி. அ, பலவின்பால் வினைமுற்று விகுதி. முதற்று, ஒற்றன்பால் வினைமுற்று. ஏ, தேற்றப்பொருள்தரும் இடைச்சொல்.

2. உவமை-ஒப்பாகும் பொருள். கவலை-பிறவி முதலியவற்றால் வருந்துன்பங்கள். அரிது, குறிப்பு வினைமுற்று.

3. வேண்டல்-விருப்புறுதல். வேண்டாமை-வெறுத்தல், இடும்பை-ஈண்டுப் பிறவித்துன்பத்தை யுணர்த்தும்.

## தேவாரம்.

ஆன்மாக்கள் சிவனை வழிபட்டு உய்யும்பொருட்டுப் பலவற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்டது.

4. ஆதியானை-யாவர்க்கும் முதல்வனை. அமரர்-தேவர்கள். பாலது-பான்மையையுடையது. கண்டீர், முன்னிலையசைச் சொல்.

## திருவாய்மொழி.

நாலாயிரப்பிரபந்தத்தின் ஒரு பகுதியாகிய இது, நம்மாழ்வார் என்ற சடகோபரால் அருளிச்செய்யப்பட்டது.

5. மயர்வு-மயக்கம். அதிபதி—முதன்மையானவன். எழல், வியங்கோள் வினைமுற்று.

## கந்தபுராணம்.

இந்நூலை யியற்றியவர் கச்சியப்ப சிவாச்சாரியார். இவர் காஞ்சிபுரத்தில் ஆதிசைவ மரபில் உதித்தவர். குமரக்கோட்டத்து பூஜைசெய்து கந்தவரப்பிரசாதியாய் கந்தபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.

6. தா அறும்-குற்றமற்ற. தேவு-கடவுள், தே, என்னும் பெயர் உகரச்சாரியை பெற்று தேவு என நின்றது. நாவு என்பது மது, வாணி-சரஸ்வதி.

## நளவெண்பா.

இதனை யியற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை நாட்டின்கண்ணுள்ள களந்தைப்பதியாகிய பொன்விளைந்தகளத்தூரி லுதித்தவர். இவரை முதலில் ஆதரித்தவன் முரணைநகர் சந்திரன் சுவர்க்கியாவான். பின்பு இவர் பாண்டி மண்டலமடைந்து, அப்பாண்டியன் சமஸ்தான வித்துவானாக சிலகாலமிருந்தனர். பாண்டியன் தன் புத்திரியை விக்கிரமசோழனுக்கு விவாஹம் செய்துகொடுக்கையில் புகழேந்தியாரையும் ஒரு சீதனப்பொருளாக வைத்துக்கொடுத்தனன். இவர் சோழநாடு சேர்ந்து ஒட்டக்கூத்தர் கர்வத்தை யடக்கி, புகழ்கொண்டனர்.

1. காமர் கயல்-அழகிய கெண்டை மீன்களானவை. காவி முகை-நீலோற்பல மலரின் பேரரும்புகள். நெகிழ-புஷ்பிக்க நாட்டம்-கண்கள். தகைமைத்து-தன்மையையுடையது இது ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.

2. மருங்கு-பெண்களின் இடுப்பு. இரவு-யாசிப்பு. கரவு-களவு. வரிவளையார், வினையாலணையும் பெயர்.

3. தானை-சேனை, பீடாரும்-பெருமைபொருந்திய, தண்தார்-குளிர்ச்சி பொருந்திய மாலை.

4. வாங்குவளை-வளைந்த வளையல்கள். வதனமதி-முகமாகிய சந்திரன். குவளை-நீலோற்பலமலர். தேன் ஆடி-தேனில் முழுகி. வளைக்கையார், வினையாலணையும் பெயர்.

5. நீள்நிறம்-சிறந்த வெண்ணிறம், தாள்நிறம்-பாதங்களின் சிவந்த நிறம். பொய்கை-தடாகம். மாண் நிறத்தான்-பெருமை பொருந்திய நிறமுடைய நளன். நிறம்-மார்பு. அப்புஉள்-நீரில். புள்-பறவை.

6. மடவனமே-இளமைபொருந்திய அன்னமே. வஞ்சி யனையார்-வஞ்சிக்கொடிபோலும் இடையையுடைய பெண்களது. விஞ்சியது-மேம்பட்டது. தார்மன்-மாலையையணிந்த நளன். அன்னம் என்பது தொகுத்தல் விகாரத்தால் அனம் என்றாயிற்று.

7. வெண்கவிகை-வெண்கொற்றக் குடையையுடைய. இசை-கீர்த்தி, அணங்கு-தெய்வப்பெண்.

8. நாற்குணம்-நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. நாற் படையை-யானை, குதிரை, தேர், காலாள் ஆகவும். ஐம்புலன்-மெய், வாய், கண், மூக்கு, செவி. ஆர்க்கும்-சப்திக்கும்படியான.

9. கன்னி-இளமைப்பருவமுடையாள். நுதல்-நெற்றி. நன்னுதல், பண்புத்தொகை.

10. செம்மனத்தான்-செவ்வையாகிய மனமுடையவன். தண் அளியான்-குளிர்ந்த கருணையுடையவன். வாங்கும்-கவரும்படியான. நான்குநிலம் ஆவன, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். மனத்தான், அளியான், இவ்விரண்டும் வினையாலணையும் பெயர்கள்.

11. வாவி-தடாகம். காவினிடை-சோலையினிடத்தும். பார் வேந்தன்-பூமியையரசு புரியும் அரசன். ஆதி-ஆவாய்.

12. குழல்-கூந்தல், கவரி-சாமரை, கால்-காற்று, மருங்கு உலவ-பக்கத்தில்வீச, வளை-சங்கு, கருங்குழல், செங்கை பண்புத்தொகை.

13. கோதை சுமந்த-மாலையைத்தாங்கிக் கொண்டிருக்கின்ற, நுடங்க-அசைய, காந்தாரம்-ஓரிசை, ஓதி-கூந்தலையுடைய.

14. பிறை நுதல்மேல்-பிறைச்சந்திரன் போலும் நெற்றியினிடத்து, கோ-அழகிய.

15. சுயம்வரம்-தனக்கு நாயகனைத் தானே தேடிக்கொள்ளல். பைங்கமுகு,பண்புத்தொகை,பைங்கமுகு-பசியபாக்குமரம்,கொழுந்து-ஈண்டு நீர்த்துளியினை யுணர்த்தும்.

16. மால்-பெரிய, கோல்வளைதன்-சப்திக்கின்ற வளையலையணிந்த தமயந்தியின், சால்பு-பெருமை.

17. தெரியல்-மாலை, வான்-ஆகாயம்.

18. கண்ணுற்று-பார்த்து, விண்ணவர்கோன்-தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன், ஓராது-ஆராயாது.

19. விண்ணவர்-தேவர்கள், ஏவல்-கட்டளை, வன்மொழி-கடுமையான சொற்கள். வன்மொழி, மென்மொழி, இவை பண்புத்தொகை.

20. அங்கி-நெருப்பு, அமுதநீர்-அமிர்தம்போலும் இனிய நீர், சங்கையற-சந்தேகமில்லாமல், ஆகண்டலன்-இந்திரன், மற்றோன்-அக்கினி.

21. செங்கமலம்-சிவந்த தாமரை, பொய்கைவாய்-தடாகத்தினிடத்து.

22. காசினியில்-பூமியில், வண்ணம்-அழகு பொருந்திய,நுதல்-நெற்றி.

23. மனம்சுளிக்க - மனம்கோபிக்க. கண் அகன் - இடமகன்ற, வன்மாலை-கொடிய மயக்கத்தை, வயம்-வெற்றி.

24. இமையவர்-தேவர்கள், தம்கோன்-இந்திரன், கோ என்பது னகரச்சாரியை பெற்றுக் கோன் என நின்றது. இமையவர், வினையாலணையும் பெயர்.

25. வெறி-வாசனை, கேள்வன்-நாயகன், கீழ்மை-தாழ்மை.

26. பாராளுங்-பூமியையரசுசெய்கின்ற, வாய்மைநெறி-மெய்மையான மார்க்கம், கலி-கலிபுருஷன்.

27. நல்நெறியில்-நன்மார்க்கத்தினின்றும், போதுவாய்-வருவாயாக.

28. புன்காகம்-அற்பமாகிய காகமானது, பொடியாட-புழுதிபடும்படியாக, தேவி-நாயகி, கொடியான்-புட்கரன்.

29. பாரிடத்தை-பரந்த இப்பூமியை, தாயே-இது விளிப்பெயர்.

30. கொற்றம்-வெற்றி, துகில்-வஸ்திரம், புள்-பறவை, பற்றகலாஉள்ளம்—அன்பு நீங்காத மனம், கொடியே, மகடூஉ முன்னிலை.

31. கூந்தல் இளங்குயிலும்-கூந்தலையுடைய இளமையான குயில்போற் பேசும் தமயந்தியும், பூந்துகில்-அழகிய வஸ்திரம், அந்தரம்-ஆகாயம், தோற்பித்தோன், வினையாலணையும் பெயர்.

32. புறங்கடையில்-அரீதியில், கொல்,இடைச்சொல்.

33. ஆயர்-இடையர்கள், அடுபாவில்-காய்ச்சிய பாவிடத்து, தோயல்-தயிர், அடுபால், வினைத்தொகை, வேலான், வினையாலணையும் பெயர்.

34. தீக்கானகம்-தீப்பொறி கிளம்பும் காட்டினிடத்திலுள்ள, கோக்காதலியை-அழகிய புத்திரியை, குறிக்கொண்மின்-பாதுகாப்பீர்களாக, ஏதிலன்-அநாதி.

35. வெய்ய அரவின்-கொடியபாம்பினுடைய, அபயம்-அடைக்கலம், இருள் ஈரும்பூணாள்-இருளைப்போக்கும் ஆபரணத்தையுடைய தமயந்தி.

36. யாக்கை-சரீரம், அலமந்து-வருந்தி, சீறுவிளித்தாள்-கோபித்துப் பார்த்தான், சிலை-வில்.

37. வணிகன்-வியாபாரி. வட்டை-வழி.

38. கந்தன்-புத்திரன், கன்னி-புத்திரி, பதி-நாடு, பண்டைவிதி-ஊழ், கோன் என்பது னகரச்சாரியை பெற்றுநின்றது.

39. தச-பத்து என்னும் ஒரெண், கடி, ஆகிய விவ்விரு பொருளினும் வரும். வலான்-வல்லமை வாய்ந்தவன். இது இடைக் குறை விகாரம்.

40. செற்ற-வலியிழந்த, கழல்-பாதம், தச-பத்தென்னுமோ ரெண், கடி, எயிறு வைத்தான்-பற்களால் கடித்தான், தீங்கவி, பூங்கழல் இவ்விரண்டும் பண்புத்தொகை.

41. மணித்துகில்-அழகிய வஸ்திரம், தண்-குளிர்ச்சிபொருந் திய, கழுநீர்ப்போது-நீலோற்பலமலர், வரால்-கெண்டை மீன்,

42. வாகு-புஜம், நாமம்-பெயர், கனகத்தேர்-பொன்னுலாகிய தேர், பார்த்தொழிற்கு மிக்கானை-இராஜ்ஜிய பரிபாலனம்செய்வதிற் சிறந்த நளனை, செம்மனம், பண்புத்தொகை.

43. மறித்து-திரும்பவும், (ஆராயின்) யாக்கை-சரீரம், ஏந்து நூன் மார்பன்-முப்புரிநூலை மார்பின்கண் ஏந்திய தூதனாகிய சுதேவன்.

44. எங்கோன்-எமக்குத் தலைவனாகிய வீமராசனது, முரசம்-பேரிகை, அந்தணன்-குளிர்ந்த கிருபையையுடையவன், அந்தத்தை யணவுவான்.

45. வெய்துயிரா-பெருமூச்செறிந்து, புக்கு-புகுந்து, வன்மம்-வெற்றியையுடைய, மன்-நளன்.

46. கொற்றம் - வெற்றித்தன்மையுடைய, மடைத்தொழில்-சமையற்றொழில், காண்-முன்னிலையசை.

47. அரவரசன்-பாம்புகட்கு அரசனாகிய கார்க்கோடன், அம்-அழகிய, துகில்-வஸ்திரம்.

48. மிக்கோன்-மேலான தன்மையையுடைய விஷ்ணு, சார் பாக-துணையாக, நீத்து-நீக்கி, கரந்துறையும்-மறைந்து வசிக்கும்படி யான,மானகத்தேர்-பொன்னுலாகிய தேர், வடிவு-உருவம்,அருவினை-வினைத்தொகை.

49. மின் சொரியும்-ஒளிவீசும்படியான, கிளர்-விளங்குகின்ற, வாள் தானை-வாட்படை.

50. மின்கால் - ஒளியைக் கக்கும்படியான, அயில் - கூர்மை பொருந்திய, மட்டிறைக்கும்-தேனைச் சொரியும்படியான, கலி-கலி புருடன்.

51. செந்தமிழோர்-தமிழ் வித்வான்கள், நாவேய்ந்த-நாவினாற் செய்யப்பட்ட, கோ-அழகிய.

52. ஏனை-மற்றுமுள்ள, சேனை-படைகள், புடை-பக்கங்களில், புரந்தரன்-இந்திரன், புக்கான்-அடைந்தான்.

## கம்பராமாயணம்.

இந்நூலை யியற்றியவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடரா வர். இவர் குலோத்துங்க சோழன் அரசு செலுத்திய சோழமண்ட லத்தில் திருவழுந்தூரிலிருந்த ஒரு ஒச்சன் குமாரரென்பர். இவர் இங்கு வளர்ந்து கம்பநாடனென்று பலராலும் அழைக்கப்பட்டுத் தீவிர புத்திமானாக விளங்கினர். இவரது மதி நுட்பத்தைத் தன் னறிவாலும் கேள்வியாலும் நன்குணர்ந்த திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்னும் பிரபு இவரையும், இவரது தாயையும் ஆதரித்து வந்தனர். பின்பு புவியரசர் போற்றும் கவியரசராகவு மாக்கினர். இவர் திருவழுந்தூரினர் என்பதை "கம்பன் பிறந்தவூர் காவிரிதங்குமூர், கும்பமுனி சாபம் குலைந்தவூர்-செம்பதுமத், தாத கத்து நான்முகனும் தாதையுந்தே டிக்காணு, வோதகத்தார் வாழு மழுந் தூர்" என்பதனாற் றெரியலாம். இவரது கவிவன்மையையறிந்த சோழன் முதலியாரிடமிருந்து அழைத்து வந்து ஆதரித்துவரும் பொழுது இவரை இராமாயணம் பாடும்படி சோழன் கட்டளையிட நாளொன்றுக்கு எழுநூறு கவிகளாகப்பாடிமுடித்தனர். இவர்ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலியோர் காலத்திலிருந்தவர்.

1. கணக்கிறந்த-அளவில்லாத, நாவாயான்-தோணிகளையுடை யவன், வெம்-கொடிய, கரி-யானை, கொங்கு-வாசனை, குறி-பெயர், வெங்கரி, பண்புத்தொகை.

2. திண்மை-வலிமை, அல்-இருள், மழை-மேகம், மணி-அழகமைந்த, திண்மையான், மேனியான், இவ்விரண்டும் வினையாலணையும் பெயர்கள்.

3. தூரிசிலா-குற்றமில்லாத, தழீஇக்கொண்ட, இது உயிரளபெடை.

4. குறுகி-அடைந்து, துன்று - நெருங்கிய, குஞ்சி - முடியையுடைய, கோன்-பெருமையையுடையவன், கோன் என்பது னகரச் சாரியை பெற்று நின்றது.

5 வற்கலை - மரவுரி, மாசடைந்த - அழுக்குப்படிந்த, விம்முற்று-பெருமிதமடைந்து.

6. நம்பி-ஈண்டுப் பரதனைக் குறிக்கின்றது, எம்பெருமான்-எம்மையாளும் ஸ்ரீ ராமனது, பிழைப்பு-தவறுதலானவை.

7. இடுக்கண்- துன்பம், உலையாத-நீங்காத, தண் + துறை= தண்டுறை-குளிர்ந்த கரையினிடத்துள்ள, நாவாய்-தோணி.

8. வந்தெதிரேதொழுதான்-பரதன், மலரிருந்த வந்தணன்-பிரமன், சென்னி-சிரசு, களிகூர-ஆனந்தம் மிகும்படியாக.

9. புளிஞர் வேந்தன்-வேடர்கட்குத் தலைவனான குகன், எழு-மலை, முந்தையோர்முறை-ஞானம், சீலம்,காலம் இவற்றால் முதிர்ந்த பெரியாருடைய ஒழுகலாறு. தோளாய், விளிப்பெயர்.

10. கிராதர்-வேடர், விம்மினன்-ஏக்கமுற்றவனாகி, கமலம்-தாமரை, சேவடி, இது பண்புத்தொகை.

11. தரணிதன்னை - இராஜ்ஜிய பாரத்தை, சிந்தனை - (இராமனைக் கொணர்ந்து முடிசூட்டவேண்டுமென்ற) எண்ணத்தை, அம்மா, ஆச்சரியப்பொருள்தரு மிடைச்சொல்.

12. இரவி-சூரியன், கற்றை-தொகுதி, கூட்டம். உரவு-வலிமையையுடைய.

13. மாற்றம் - சொற்கள், இயைவன - பொருந்தக்கூடிய, கழல்-காலணி, புலவு-புலால் நாற்றம் வீசும்படியான, புனைகழல், வினைத்தொகை.

14. வாரி-சமுத்திரம், அண்ணல்-பெருமையிற் சிறந்த பர தன், எம்முன்-என் தமையன், செங்கை, பண்புத்தொகை, வீர, விளிப்பெயர்.

15. கார்என-மேகம்போல, கடிது-விரைவாக, வார்-நீண்டிருக் கின்ற, சிலை-வில், பள்ளி-படுக்கை, பருவரல்-துன்பம், பரவை-சமுத் திரம், மண்ணும்நீர்-கழுவும்நீர், தடக்கை-பண்புத்தொகை.

16. இடர்-துன்பம், அயின்றனை-புசித்தனை, ஆவி துறந் திலன்-உயிர்விட்டிலேன், சுடரும்-பிரகாசிக்கின்ற, காசு-இரத்தினங் கள், குயின்று-பதித்து.

17. தாண் + தர, நிவந்த-உயர்ந்திருக்கின்ற, சூழல்-இடம், நிமிர்ந்த-மிகுந்த, நேயம்-அன்பு.

18. அல்-இருள், துஞ்ச-நித்திரைசெய்ய, வெய்துயிர்ப்பு-கோபம், கங்குல்-இராக்காலம், எல்லை-முடிவு, நயனம்-கண், தோளாய், விளிப்பெயர்.

19. மைந்தன் (பலத்தையுடைய) பரதன், ஏதுகாரணம், என் பத்தை, அன்பத்து, இவ்விரண்டும் விரித்தல் விகாரம்.

20. வைகி-வசித்து, தெவ்வு-பகை. இடர்க்கடல்-துன்பக்கடல், செறிகழல், வினைத்தொகை. மான், பெயர்விகுதி.

21. தார்-மாலை, குரிசில், இது அண்மைவிளி, மூன்று உலகும், ஈன்றான்-பிரமன், முன்னீன்றான்-விஷ்ணு.

22. கழல்-வீரகெண்டை, குன்று-மலை, அனைய-ஒத்த.

23. மெய்வீரர்-சத்தியந்தவறாத வீரர்கள், விலங்கல்-மலை, திண்-வலிமையையுடைய, அகலிடம்-அகன்ற இடமாகிய பூமியை.

24. நெறிதிறம்பா-நன்மார்க்கத்தினின்றும் மாறுபடாத, திறம் பா, இது ஈறுகெட்ட வெதிர்மறைப் பெயரெச்சம்.

25. துணை - நாயகனுண தயரதன், ஆர் கலி - சமுத்திரம், கூறும், செய்யுமென் வினைமுற்று. இது பல்லோர் ஒழிந்த நாற் பாற்கு முரித்து.

26. படர்-துன்பம், செவிலி-வளர்க்குந்தாய், இடர்-துன்பம், இலா, ஈறுகெட்ட வெதிர்மறைப் பெயரெச்சம்.

27. தன் + நற்கை, பேடை-பெட்டை, துன்னிற்று-நெருங்கிற்று.

## சோமேசர் முதுமொழி வெண்பா.

இந்நூலை யியற்றியவர் மாதவச்சிவஞான யோகிகளாவர். இவர், பாண்டியநாட்டின்கண் பாவநாசத்தைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் வேளாளர் குலத்தில் சகல பேறுகளும் நிறம்பிய ஆனந்தக்கூத்தர் செய்த தவப்பேற்றால் புத்திரராகத் தோன்றினர். இவரது இயற்பெயர் முக்களாலிங்கர். இவர் சிறுவயதிலேயே மதிநுட்ப மமைந்தவராய், திருவாவடுதுறை வேலப்ப தேசிகரையடைந்து சகல சாத்திரங்களிலும் வல்லுநராய் வடநூற்கடலும் தென்னூற் கடலும் நிலைகண்டுணர்ந்தனர். இவர் செய்த வேறு நூல்கள் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல் விருத்தியுரைத் திருத்தம், காஞ்சிப்புராணம் முதலியன.

1. ஆர்வலர்-அன்புடையார், புன்கண்ணீர்-புல்லிய கண்ணீரே, பூசல்-(உள்நின்ற) அன்பினை, கரந்தும்-மறைந்தும், தோன்றல்-புத்திரன், தோன்ற நின்றான்-தான் இன்னான் என்பதைப் பிறர் அறியும்படியாக நின்றான். இது நளனுடைய சரிதையை யுட்கொண்டுளது.

2. மன்னா-நிலைபெறாத, பன்னும் - ஆராயும்படியான, அசதி-ஓர் இடையன், கோவை-ஓர் பிரபந்தம். இது, அசதி யென்பவன் செய்த நன்றியை மறவாமல் ஔவையார் கோவை பாடிய கதையை யுட்கொண்டுள்ளது.

3. ஆயின்-ஆராயின், வழுக்கியும்-மறந்தும், ஒல்லா-முடியா, தீயது அலா-குற்றமற்றதல்லாத, இது, கண்ணன் சிசுபாலனிடத்து ஒழுக்கமுடனிருந்து நற்சொற் கூறிய கதையை யுட்கொண்டுள்ளது.

4. நீப்பினும் - நீங்குமாயினும், வேந்துமகன் - மனுச்சோழன் குமாரனாகிய வீதி விடங்கன், செய்யற்க, வியங்கோள் வினைமுற்று. இது மனுச்சோழனது மந்திரி அவ்வரசன் புத்திரனைக் கொல்வதற்குப் பயந்து தன்னுயிரைவிட்ட கதையை யுட்கொண்டுள்ளது.

5. பாடு-பெருமை, மெய்த்த-மெய்ம்மையைக்கொண்ட, துய்த்த-அனுபவித்த, சங்கத்தார், நக்கீரர் உள்ளிட்ட நாற்பத்தொன்பதின்மர். இது திருவள்ளுவநாயனார் சங்கத்தாரிடம் சென்று நூல் அரங்கேற்றிய கதையை யுட்கொண்டுள்ளது.

6. அளவளா இல்லாதான் வாழ்க்கை - சுற்றத்தாரொடு நெஞ்சுகலத்த லில்லாதவனுடைய வாழ்க்கையானது, கோடு-கரை, அரக்கன்-இராவணன், ஆர்வீடணனோடு-அன்பு பொருந்திய வீபீஷணனோடு, அளவளா, இது முதனிலைத் தொழிற்பெயர். இது இராவணன் தன் தம்பியுடன் நெஞ்சுகலத்தலின்றி வாழ் விழந்த கதையை யுட்கொண்டுள்ளது.

7. துவ்வாத-பரிசுத்தமில்லாத, சூரன்-சூரபன்மன், செவ்வேள்-கந்தவேள், திறல்-வலி, அச்சு-உருள்கோத்த மரம். ஆணி-அவ்வுருள் கழலாது அம்மரத்திற் செருகுவது. இது சூரபன்மன் முருகவேளைச் சிறியனென்று எள்ளித் துயருற்ற கதையையுட்கொண்டுள்ளது.

8. அ, கரவை-அம்மறைப்பினை, துப்பு-வலி, ஐயப்படாது-சந்தேகமில்லாமல், கொளல், வியங்கோள் வினைமுற்று. இது நாவுக்கரசரை அப்பூதியடிகள் தன்குமாரனை மறைத்துவைத்து அமுதுண்ணுமாறு பிரார்த்தித்த கதையை யுட்கொண்டுள்ளது.

9. நகையாள்-பற்களையுடைய அம்பிகை, உவரி-சமுத்திரம், இது சிவபெருமான் தன் நகையினால் முப்புரங்களை யழித்த கதையை யுட்கொண்டுள்ளது.

10. திலகவதி-திருநாவுக்கரசரின் தமக்கை, சொல்லரசர்-நாவுக்கரசர், புல்லிய-பற்றிய, நோய்முதல்-வியாதி வருவதற்குக் காரணம், வாய்-உபாயம், இது, நாவுக்கரசரைச் சமணமதத்தினின்றும் நீக்குவதற்குச் சிவபெருமான் அவர்க்குச் சூலைநோய் உண்டாக்கித் தணித்த கதையை யுட்கொண்டுள்ளது.

## சீகாளத்திப் புராணம்.

இந்நூலை யியற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காஞ்சிபுர குமாரசுவாமி தேசிகர் குமாரர். உலகத்தார் உய்யும்பொருட்டு அநேக நீதிநூல்களை இயற்றியிருக்கின்றனர். இப்புராணத்தின் ஒரு பகுதியே யிவர் பாடியிருக்கிறார். இவர்செய்த வேறு நூல்களாவன: நெஞ்சுவிடுதூது, அதிசயப்பத்து, நன்னெறி, நிரஞ்சனமாலை முதலியன.

1. மாண்தரும்-மாட்சிமைப்பட்ட, முன்குணங்கள்-முன்னால் ஏற்பட்ட குணங்கள், ஆண்தகை, பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, கெழு-விளங்கும்படியான.

2. தாழாது-தாமதியாது, நீள் எழு-நீண்ட மூங்கிலை யொத்த, ஞெமுங்குற-அழுந்தும்படியாக, வாள் அழல் அரக்கு-ஒளிபொருந்திய நெருப்பிற்பட்ட அரக்கு.

3. மயிர்பொடிப்ப-மயிர்க்கூச்சலெடுக்க. ஆதன்-குருடன். எயிறு-பற்கள். நக்கு-ஆனந்தித்து. விடலை-ஆண்மையிற் சிறந்தோன். செய்யகண், பண்புத்தொகை, செறிமயிர், வினைத்தொகை.

4. எண்கு-கரடி. யாளி-சிங்கம். முளவு-முட்பன்றி. ஏனம்-பன்றி. தடக்கை, பண்புத்தொகை.

5. கேழல்-பன்றி. அழுங்கு-ஒரு சிறியபிராணி. காண்டிவா-காணும்பொருட்டு வருவாயாக. தீம்பழம், பண்புத்தொகை.

6. ஏமம்-பாதுகாவல், அற்புக்கடல்-அன்பாகிய சமுத்திரம். அன்பு + கடல்.

7. வழங்கலன்-சொல்லாதிருக்க, மீளி, ஆண் மகனைக் குறிக்கும் சிறப்புப்பெயர்.

8. ஆட்டுபு-ஆட்டுவதற்காக, முருகு-தேன், வாசனை. மாலூர்த்தளிர்-வில்வமரத்தளிர். இருத்தல், தொழிற்பெயர்.

9. ஊன்-மாமிசம். கொன்-அச்சத்தைத்தரும்படியான. ஈட்டம்-கூட்டம். இன்சுவை, வினைத்தொகை.

10. சாலவும்-மிகவும். ஒரு கணத்துள்-வெகு விரைவில். எரிபசி, உறுசுவை, இவ்விரண்டும் வினைத்தொகைகள். தழற்பசி, உவமத்தொகை.

11. உழுந்துருள்பொழுது - விரைவுக்குறிப்பு. தாமேழன்-தாமதியேன். ஒய்யென-விரைவாக. குழைந்தவில்-வளைந்தவில்.

12. கடிக்கடிமனை - காவலையுடையதும் சிறந்ததுமான வீடு. வடிக்கடி-மிகக்கூரிய. கிடி-பன்றி. புனிறு + ஆ = புனிற்று-இளமையான பசு.

13. கோண்தருசிலை - வளைந்தவில். பாவை - மரத்தாற்செய்த பொம்மை. தடம்-விசாலமான.

14. உரும் - சப்திக்கின்ற. ஒடுங்கல்இல் - அளவில்லாத. உருமேறு, வினைத்தொகை.

15. குருதி பொங்க-இரத்தம் வடிய. எழில்கனி மார்பு-அழகு மிகுந்த மார்பு. தடக்கை, பண்புத்தொகை.

16. எவ்வம்-துன்பம். ஒன்னார்-பகைவர், தெவ்வை-பகைமையுடையதை. தெவ்வு, பண்பாகு பெயர்.

17. இலகு-விளங்குகின்ற. கொல்-இடைச்சொல்.

18. காலுதல்-வடிதல். பெயர்ந்தனன்-நீங்கினான்.

19. கூனுலாம் சிலை-வளைவையுடைய வில், வேனிலாற்காய்ந்த தேவின்-மன்மதனை யெரித்த சிவபெருமானுடைய, சோரி-இரத்தம்.

20. வானவன்-சிவபெருமான். கணை-அம்பு.

21. முடங்குளை மடங்கல்-வளைந்துகிடக்கும் பிடரிமயிர்களையுடைய சிங்கம். ஆழ்கடல், வினைத்தொகை.

22. குருதி-இரத்தம். ஆர்கலி-கடல். (ஒலியுடன் கூடியது) வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

23. நிரயத்துள்-நரகலோகத்தில். துறக்கம்-மோக்ஷம். வரை-மலை, புரை-ஒத்த.

24. அடுகணை-பகைவரைக்கொல்லத்தக்க அம்பு. அடுகணை, வினைத்தொகை.

25. ஆழி-சமுத்திரம். கறையணற்கங்கணத்த-விஷத்தை வாயிலுடைய பாம்பைக் கங்கணமாகவணிந்த.உம்பர்-தேவர்கள். செங்கை, பண்புத்தொகை.

178929

## மகாபாரதம்.

இந்நூலை யியற்றியவர் ஸ்ரீவில்லிபுத்தூரார். இவர் திருமுனைப் பாடி நாட்டில் சனியூரில் வீரராகவாச்சாரியாருக்குப் புத்திரராகத் தோன்றி, புலவர்கள் மதிக்கத்தக்க புலமை நிரம்பப்பெற்றவர். வரபதி யாட்கொண்டான் என்னும் சேர அரசனுலாதரிக்கப்பட்டு அவ னேவலா லிதனை முடித்தனர். சந்தர்ப்பத்திற்கேற்ற சந்தமும் பொரு ளும் அமைந்த இவரது செய்யுட்கள் இவரது புலமையை நிரூபிக்கும்.

1. அராவணை-சர்ப்பசயனம். தராதலம்-பூமி. குரா-ஓர்மரம். கோவியர்-ஆயர்கள். குரவை-ஓர்கூத்து. புராதனன்-பழமையானவன்.

2. புரோகிதன் - உலூகன். புயங்ககேது - பாம்புக்கொடியை யுடைய விரோசனன். சுதன்-துரியோதனன். கங்காசுதன்-பீஷ்மாச் சாரி. சரோருகம்-தாமரை. சதனம்-வீடு. கேது-கொடி. வெகுளி- கோபம்.

3. தேயம்-தேசம். இது இடைப்போலி. திகிரி-சக்கராயுதம். ஆயவர்-ஆகியவர். அடவி-காடு. வளர்மதில், வினைத்தொகை.

4. எடுஅவிழ் - இதழ்கள் விரிந்திருக்கின்ற. பத்தி - வரிசை. செங்கதிர், பண்புத்தொகை.

5. கார்க்கடல்-கருங்கடல். விரகு - உபாயத்தை. பொறிகள்- இயந்திரங்கள். புரிசை-மதில். வண்ணன், வினையாலணையும் பெயர்.

6. எழிலிவண்ணன்-மேகம்போலும் கருநிறமுடையகிருஷ்ண பகவான். எழில்-அழகு. வியன்-பெரிய. குடுமி - உச்சி. பதாகை- கொடி. வண்ணன், வினையாலணையும் பெயர்.

7. அருள்குடியிருக்குங் கண்ணன்-கிருஷ்ணன். தரணி-பூமி. சித்து-அறிவுடைப்பொருள். அசித்து-அறிவிலாப்பொருள்.

8. பந்தனை-பாவத்தை.

9. பொற்பு-அழகு. புனிதன்-பரிசுத்தத் தன்மையையுடைய கிருஷ்ணன். அனிகம் - படை. உற்பலம் - நீலோற்பல மலர். தவிசு- ஆசனம்,

10. பாதபங்கயம்-திருவடித்தாமரை.

11. அவண் இருந்த-அவ்விடத்திலிருந்த. நேமி - சக்காயுதம். மன்றல்-வாசனையையுடைய. உரம்நெருங்க-மார்பு பொருந்த. இன் சொல், பண்புத்தொகை.

12. செருவினில்-யுத்தத்தில். வெம்போர், பண்புத்தொகை.

13. அமர் - யுத்தகளம். உதிட்டிரன் - தருமன். திறல் - வலிமையையுடைய.

14. முடைகமழ்-மூடைநாற்றம் வீசும்படியான. பன்னகதுவசன்-பாம்புக்கொடியையுடைய துரியோதனன். அறைதி-சொல்வாயாக. அடுபடை, வினைத்தொகை.

15. தூண்டின்-செலுத்துவானேயானல். வெருவரும் - அஞ்சத்தக்க. சிலை குழைய-வில் வளையும்படியாக. செழுஞ்சுடர், பண்புத்தொகை.

16. அமலன்-மலமற்றகண்ணன். பார்த்திபன் றன்னை-துரியோதனனை.

17. யாதவகுலத்துளோர் - யதுவமிசத்திற்பிறந்தோர். தாலகேது-பலராமன். தாலம்-பனை. மும்மை-இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் என்னும் முக்காலங்களை உணர்ந்தும்.

18. அக்குரோணி-ஓர் எண். கிளர்-விளங்குகின்ற. கண்ணன் முன்னோன்-பலராமன். செங்கண், பண்புத்தொகை.

19. சங்கவண்ணன்-சங்குபோலும் வெண்ணிறத்தினையுடைய பலராமன். இளவல்-சகோதரன்.

20. கொடியவன் - துரியோதனன், கொடிய தன்மையை யுடையவனுமாம். ஆறிரு நாமத்தோன்-கிருஷ்ணன், பன்னிரண்டு பெயர்களை யுடையவனென்பது பொருள். ஐயிருநாமத்தோன் - அர்ச்சுனன், பத்துப்பெயர்களை யுடையவனென்பது பொருள். செழும்புனல், பண்புத்தொகை. நாமத்தோன், வினையாலணையும் பெயர். இருக்கை, தொழிற்பெயர்,

## பழமொழி.

இந்நூலை யியற்றியவர் பாண்டிநாட்டில் மூன்றுறை என்னும் பதியை அரசுபுரிந்த அரசராவர். இந்நூல பதினெண்கீழ்க் கணக்கினுளொன்று. தனித்தனி ஒவ்வொரு பழமொழியையும் ஈற்றிற் கொண்ட நானூறு வெண்பாக்களையுடையது. இந்நூலாசிரியர் அரசுபுரிந்த பதியின் பெயரே இதற்குப்பெயராக வழங்கலாயிற்று. இவர் கடைச்சங்க காலத்தவர்.

1. தொக்கக்கால்-கூடியவிடத்து. ஞாலம்-பூமி. பாயிருள்-பரந்த இருள். மீன்-நக்ஷத்திரம். அறிவிலார், குறிப்பு வினையாலணையும் பெயர்.

2. ஒற்கப்பட - வறியராம்படி. மூயறும் - முயல்வோம். தளிர்வரை-குளிர்ச்சிபொருந்திய மலை. உய்ந்தார்-பிழைத்தார். மூயறும்-தன்மைப்பன்மை வினைமுற்று.

3. மாண - பெருமைப்பட. (கொல்+சேரி) கொற்சேரி-கொல்லர் இருப்பிடம். துன்னூசி - தைக்கும் ஊசி. (துன்னல்-தைத்தல்.)

4. நாடுதல்-ஆராய்தல். மலைநாட-விளிப்பெயர்.

5. பொறி-கீற்றுக்கள். மூரலும் - ரீங்காரம் செய்யும்படியான. தவிசு-ஆசனம்.

6. நுணல்-தவளை. கெடும்,செய்யுமென் வினைமுற்று. இது பல்லோரொழிந்த நாற்பாற்கு முரித்து.

7. முட்டு - தட்டுப்பாடு. உடைய - (சகல சம்பத்துக்களும்) நிறைந்த. அட்டிற்று-சமையலறையில். தார்—மாலை.

8. மறை-பிறர் அறியலாகாதவற்றை. எஃகுதல்-பஞ்சிகொட்டுதல். நாட, விளிப்பெயர்.

9. சேய்த்து-நீடித்து. அணிக்கோடல் - விரைவிற் கொள்ளுதல். கலை-ஆண்முசு. (முசு-ஒருசாதிக்குரங்கு) எற்கல்-சிறுகுன்றுகள்.

10. புன்மை+சொல்=புன்சொல். வன்மை+சொல்=வன்சொல். இவை இரண்டும் கேட்பார்க்குத் துன்பத்தையும் இன்பத்தையும் முறையே உண்டாக்குவன.

## ஆசாரக்கோவை.

இந்நூலை யியற்றியவர் பெருவாயின் முள்ளியார் என்னும் புலவராவர். இவர் சைவமதத்தினர். உண்ணல், உறங்கல் முதலிய ஒழுக்கங்களை யாவருமறிந்து நடக்கும்படியாக இந்நூலை யியற்றியிருக்கிறார். இவர் கடைச்சங்க காலத்தினராவர். கோவை-கோக்கப்படுவது.

1. வனப்பு-அழகு. நிலக்கிழமை-நில உரிமை. பிழையாதவர்-தவறாதவர். எய்துப, பலர்பால் படர்க்கை வினைமுற்று.

2. விழுத்தக்கார் - மேன்மையான தகுதியை உடைய பெரியோர். அவை-வித்வான்கள் கூடியசபை. மூத்தையோர்-மேலோர்.

3. வைகறை - விடியற்காலம். துயில்-நித்திரை.

4. தம்முன் - முன்பிறந்தோன். நிகர்இல் - சமானமில்லாத. குரவர்-பெரியோர். நெறி-மார்க்கம்.

5. குரவர்-ஆசிரியர். பருகார்-குடிக்கமாட்டார்.

6. சுடர்-மயானம். இடர்-துன்பம். மாசுணி-அழுக்குப்படிந்த வஸ்திரம். வளி-காற்று. காட்சி-ஞானம்.

7. துவ்வார்-உண்ணார். ஆற்ற-மிகுதியாக.

8. புலராமை-உலராமை. புலர், பகுதி. மை, தொழிற்பெயர் விகுதி. ஆ, எதிர்மறை இடைநிலை. பள்ளி-படுக்கை.

9. கிடத்தல்-நித்திரைசெய்தல். மீக்கோள்-மேற்போர்வை.

10. துய்க்க-அனுபவிக்க. துய், பகுதி.

11. விருந்தினர்-வீட்டிற்குப் புதிதாய் வந்தவர்.

12. அந்தி-சாயுங்காலம். வெகுளார்-கோபியார்.

13. முறுவல்-சந்தோஷக்குறிப்பு. மணை-ஆசனம்.

14. ஆண்மை-வீரம். ஆளுந்தன்மை ஆண்மை என்றாயிற்று.

15. ஊன்-மாமிசம். ஊண்-உணவு.

## நான்மணிக்கடிகை.

இது பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்று. இதனை யியற்றிவர் கடைச்சங்கப் புலவர்களி லொருவராகிய விளம்பிநாகனாராவர். இவரது காலம் சற்றேறக்குறைய இரண்டாயிரத்திருநூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இவர் வைணவ மதத்தைச் சேர்ந்தவர். நான்மணிக் கடிகை-நான்கு இரத்தினத் துண்டுகளாகிய ஓர்வகை யாபரணம். இதிலுள்ள ஒவ்வொரு பாட்டும் நந்நான்கு பொருளை யுணர்த்தும்.

1. நாற்றம்-வாசனை. மாற்றம்-சொல். தூக்கின்-ஆராயுமிடத்து. முன்னம்-குறிப்பு.

2. கூற்றம்-இயமன். அல்லவை-பாவமான காரியங்கள். இல்லம்—வீடு, அத்து, சாரியை.

3. மா, இது பெருமையை யுணர்த்தும் இடைச்சொல். இல்வழி-இல்லாதவிடத்து.

4. வளம்-செல்வம். வள்ளன்மை-கொடை. தமர்-சுற்றத்தார்.

5. மேலை-முற்பிறப்பு. உரன்-வலிமை.

# திருவாசகம்.

## குயிற்பத்து.

இதனை யியற்றியவர், பொய்யடிமையில்லாத ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளாவர். இவர் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளைத் தன்னிடத்துக் கூவி யழைக்குமாறு குயிலை முன்னிலைப் படுத்திக் கூறுகின்றனராதலின், இங்குக்கூறிய பத்துச் செய்யுட்களும் குயிற்பத்து என்று கூறப்படும். "திருவாசகத்திற் குருகாதார் ஒருவாசகத்திற்கு முருகார்" என்ற பழமொழியினாலேயே நூலினது பெருமை விளங்கும்.

1. சோதி-பிரகாசம். சொல் இறந்து-சொல்லுக் கடங்காமல். தொன்மை-பழமை.

2. ஏர்தரும்-அழகையுண்டுபண்ணுகின்ற. ஆர்கலி-சமுத்திரம். வண்டோதரி-இராவணன் மனைவி.

3. திகழும் - விளங்கும்படியான. கோலம் - செய்துகொண்ட அழகு.

4. வான் - ஆகாயம். நோக்கு - கண். மென்னோக்கு, பண்புத் தொகை.

5. ஞாயிறு - சூரியன். சிந்துரச்சேவடி - அழகிய திருவடி. சேவடி, பண்புத்தொகை.

6. ஆளி - ஆள்பவன். சுவடு-தழும்பு. கோகழி - ஒரு ஸ்தலம். மிழற்றும்-பாடும்படியான.

7. உகப்பன் - புகழ்வேன். தென்னவன் - பாண்டியன். புயங்கன்-அரவை யாபரணமாகவுடைய சிவபெருமான்.

8. அண்டம்-ஆகாயம். தாழ்சடை, விரிசுடர், இவையிரண்டும் வினைத்தொகை.

9. கடிபொழில்-வாசனைவீசுகின்றசோலை. ஆர்-ஆத்திமாலை.

10. கொந்து அணவும்-வாசனைபொருந்திய. அந்தணன்-அழகிய தண்ணளியை யுடையவன்.

128929
-600 008.

## புதிய முறைப்படி எங்களால் பப்ளிஷ் செய்யப் பட்ட பாடசாலைக்குரிய தமிழ்ப்புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| உலகநீதிக் கதைகள் | 0 | 2 | 6 |
| ஆத்திசூடிக் கதைகள் | 0 | 2 | 6 |
| கொன்றைவேந்தன் நீதிக்கதைகள் | 0 | 2 | 6 |
| வெற்றிவேற்கை நீதிக்கதைகள் | 0 | 3 | 0 |
| நற்புதல்வர்கள் | 0 | 4 | 0 |
| நற்பெண்டிர் | 0 | 4 | 0 |
| வாலி சரிதை | 0 | 2 | 6 |
| பாலர் நன்மதிக்கதைகள் | 0 | 3 | 0 |
| நீதிசாரத்திரட்டு | 0 | 5 | 0 |
| செய்யுட்பாடக்கோவை 1—ம் பாகம் | 0 | 8 | 0 |
| ஷை 2—ம் பாகம் | 1 | 4 | 0 |
| யாக்ஞவல்கியம் | 0 | 9 | 0 |
| அற்புதக்கணையாழி | 0 | 5 | 0 |
| கங்காபாய் சுயம்வரம் | 0 | 4 | 0 |
| மகாராணி மங்கம்மாள் | 0 | 3 | 0 |
| பொய்யாமொழிப்புலவர் சரித்திரம் | 0 | 8 | 0 |
| ஸ்ரீ ஆழ்வார் குலசேகரர் | 0 | 6 | 0 |
| மதுரைஜில்லா பூகோளம் | 0 | 4 | 0 |
| ராமநாதபுரம் ஜில்லா பூகோளம் | 0 | 4 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா பூகோளம் | 0 | 4 | 0 |
| திரைத்தன விளக்க பாடங்கள் | 0 | 4 | 0 |

மேற்கண்ட புத்தகங்களும், மற்ற ஸ்கூலுக்கு வேண்டிய இதர புத்தகங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

புக்ஸேல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,

மதுரை.